# GST ROAD NEWS

Weekly News Paper

Email:gstroadnews@gmail.com **TAMBARAM** www.gstroadnews.com

Chitlapakkam, Tambaram West, Tambaram East, Sanitorium, Kadapperi, Venkatraman Nagar, Nehru Nagar, Mahalakshmi Nagar, Servamangala Nagar

Vol:13 Issue -16 27 July 2025 - 02 August 2025 Pages - Free Circulation Ct: 99628 80902



LAPTOPS & COMPUTERS
SALES | SERVICES | ACCESSORIES
ஐசர்விஸ்
iService
DOOR STEP SERVICE
MONDAY to SUNDAY
10 AM TO 6 PM
No3.PADMANABHA STREET, NEHRU NAGAR, CHROMEPET
99401 60664, 94444 39494



வேதா முதியோர் இல்லம்
OLD பெருங்களத்தூர்
ADMISSION OPEN FOR MALE/ FEMALE/ BED RIDDEN
சைவ உணவு உட்பட அனைத்து வசதிகளுடன் அமைந்துள்ளது
94452 94198
79043 45245



READY TO OCCUPY


@ CHROMPET HASTHINAPURAM
BAJANAI KOVIL STREET, Nr.GOVT School
2BHK-801 Sqft (2 UNITS)
3BHK-1171 Sqft (1 UNIT)
AUTO LIFT/CCP/GOOD WATER
18 Years experience
INVITES LAND OWNERS FOR JOINT VENTURE OR OUTRATE
99404 52956



LAND FOR SALE @ AGARAMTHEN
Nr. AGARAM BUS STAND & HP PETROL BUNK

1800 Sqft NORTH FACING
1400 Sqft WEST FACING
98409 84126



PREMIUM 3 BHK FLATS @ CHROMPET- RADHA NAGAR
READY TO OCCUPY

3 BHK-1116- Sqft
LIFT FACILITY / CCP / AS PER VAASTHU
VRM BUILDERS
98400 34209 / 98408 53756



INDIVIDUAL VILLA FOR SALE@ CHROMPET
THIRUMALAI NAGAR, Nr. Zion School
MAYILAI RAMAMURTHY STREET
BUILD UP AREA 1900 Sqft
3 BHK

☑ 24 Hrs Water ☑ As Per Vasthu
GJ CONSTRUCTION
98409 41585



3 BHK INDEPENDENT DUPLEX HOUSE FOR SALE@ CHROMPET
Site Address :
HASTHINAPURAM, SARASWATHI NAGAR
NR. THIRUMALAI NAGAR, ZION SCHOOL

3 BHK
AS PER VASTHU, CCP, LOAN ARRANGED
MANICKAM CONSTRUCTION
Off.Address: Plot No.37, 7th Main Road, Vinobaji Nagar, Hasthinapuram, Chennai - 64.
94442 14382
94442 55004



FLATS FOR SALE @CHROMPET
RADHANAGAR GANAPATHIPURAM
JUST 200 ft RADIAL ROAD
SRI KRISHNA FLATS

3-BHK 1124 Sqft
2-BHK 868 Sqft
Lift/CCP/CCTV
AS PER VASTHU / 24 HRS WATER
PerSqft. ₹ 6699
JEEVA REKHA BUILDERS
78457 64414/ 88255 43215



16 YEAR IN QUALITY SERVICE
ApoorvaA
ஹோட்டல் அபூர்வா
சைவ உணவகம்
சுவையின் புதிய தேடல்
The Chennai Silks வளாகம்
குரோம்பேட்டை
கொங்கின் அசல் சுவை ஆனந்தமான அனுபவம்
காலை டிபன்
கேசரி, இட்லி1, பொங்கல், தோசை 1 (அ) பூரி 1, மெதுவடை 1 மினி காபி
(காலை 7.00 மணி முதல் 9 மணி வரை)
₹ 50/-
மதிய உணவு
தலைவாழை இலை சாப்பாடு
₹ *99/-
* நிபந்தனைகளுக்குட்பட்டது
10%
தி சென்னை சில்க்ஸ் பர்சேஸ் பில்லுடன் வரும் வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே





PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET
PADMANABHA NAGAR
(Near KARUMARI AMMAN TEMPLE)

NEW Projects
4BHK 1825 Sft
2BHK 941 & 898 Sft
BASHYAM NAGAR
Nr.ABIRAMI KALYANA MANDAPAM

NEW Projects
3BHK 1132 Sqft
2BHK 1028 Sqft
24 Hrs Power Backup*
Specification
AUTOMATIC LIFT
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Red Bricks Construction
Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER
Sankar Constructions
98416 59929 / 98416 59930

# நாக சதுர்த்தி, கருட பஞ்சமி உருவான வரலாறு

ஒவ்வொரு ஆண்டும் ஆடி அமாவாசைக்கு பிறகு வரும் வளர்பிறை சதுர்த்தியில் நாக சதுர்த்தியும், அதற்கு மறுநாள் கருட பஞ்சமி அல்லது நாக பஞ் சமி விரதங்கள் கடைபிடிக்கப் படுகின்றன. இவைகள் நாக தோஷம் அல்லது ஷர்ப்பணம் தோஷத்தில் இருந்து விடுபட கடைபிடிக்கப்படும் மிக முக்கியமான விரதங்களாகும்.



நாக சதுர்த்தி, கருட பஞ்சமி :நாக சதுர்த்தி, கருட பஞ்சமி இந்த இரண்டு விரத நாட்களுமே ஒன்றுடன் ஒன்று தொடர் புடையதாகும். கடக நட்சத்திரத்தில் இருக்கும் சந்திரன் மகம் மற்றும் பூரம் நட்சத்திரத்தில், ஆடி அமாவாசைக்கு பிறகு வரும் வளர்பிறையில் வரும். நாக சதுர்த்தி என்பது நாகர்களை வழிபடுவதற்கும், கருட பஞ்சமி என்பது கருடனை வழிபடுவதற்கும் உரிய நாளாக கருதப்படுகிறது. இந்த நாட்கள் உருவானதற்கு மிகப் பெரிய வரலாறு உள்ளது. புராணங்களில் இந்த நாக சதுர்த்தி மற்றும் கருட பஞ்சமி உருவானதற்கு இரண்டு விதமான கதைகள் சொல்லப்படுகிறது. குடும்பத்தில் பிரச்சனை, வழக்குகள், கண் திருஷ்டி, தீய சக்திகள், விபத்துக்களில் சிக்குவது, கணவன் மனைவிக்குள் ஒற்றுமை இல்லாதது, திருமணத்தில் தடை, குழந்தை பிறப்பில் தடை போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் நாக சதுர்த்தி மற்றும் கருட பஞ் சமியில் விரதம் இருக்கலாம். அப்படி விரதம் இருப்பதற்கு முன் இந்த விரதங்கள் உருவான வரலாற்றை தெரிந்து கொள்வது மிக அவசியமானதாகும்.

நாக சதுர்த்தி, கருட பஞ்சமி வரலாறு :

காசியப்ப முனிவருக்கு இரண்டு மனைவிகள். அவர்கள் பெயர் கத்ரு, வினதை. இவர்கள் இருவருக்கும் ஒருவரை கண்டால் மற்றவருக்கு பிடிக்காது. அனைத்திற்கும் இருவருக்கிடையேயும் போட்டி ஏற்பட்டது. இவர்கள் இருவரும் ஒருமுறை வாக்குவாதம் ஏற்பட்டது. அதன் முடிவில் யாருக்கு முதலில் குழந்தை பிறக்கிறதோ அவருக்கு மற்றவர் அடிமையாக இருக்க வேண்டும் என போட்டி வந்தது. இதற்கு ஒப்புக் கொண்ட இருவரும் தன்னுடைய கணவரை வேண்டி வரம் பெற்றனர்.

முதல் மனைவியான கத்ரு, தனக்கு ஆயிரம் முட்டைகள் வேண்டும். அனைவரும் பார்த்து பயந்து நடுங்கும் வகையிலான நாகங்கள் தனக்கு மகன்களாக பிறக்க வேண்டும் என வரம் கேட்டாள்.

இரண்டாம் மனைவியான வினதை, தனக்கு இரண்டு முட்டைகள் வேண்டும். யாராலும் வெல்ல முடியாத மிகுந்த பலசாலியான இரண்டு மகன்கள் பிறக்க வேண்டும் என வரம் கேட்டாள். காசியப்ப முனிவரும் அதன் படியே வரம் அளித்தார்.

# நாக சதுர்த்தி பூஜை செய்வது எப்படி?

நாகபூஜை என்பது புற்றுக்கு பால் வார்ப்பதாகும். அரச மரமும் வேப்பமரமும் உள்ள இடத்தில் நாகங்களை சிலை யாகச் செதுக்கியதைப் பிரதிஷ்டை செய்து வைத்தி ருப்பார்கள்.அதற்கு அபிஷேகம் செய்து பூஜிக்கவேண்டும். புற்று கிடைக்காதவர்கள் அன்றைய தினம் பூமியில் பால் விழுந்தாக வேண்டும் என்பதனால் சிலர் எறும்பு புற்றுக்கும் பால் வார்ப்பது உண்டு.பூமியில் பாதாளலோகத்தில் நாக லோகம் இருப்பதால், புற்றின் வழியாக நாகங்க ளுக்குப்போய் பால்சேர்ந்து, பால்வார்த்த நம்மை, பாதகம் ஏதும் செய்யா மல், காத்து அருளும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது. அரசமரத்தடிக்குச் செல்லும் போது, பஞ்சினால் செய்த கோடி தந்தியம், வஸ்திரம் இவைகளை மஞ்சள் தடவி எடுத்துக்கொண்டும், தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, கற்பூரம், ஊதுவத்தி, எண்ணை, திரி, மஞ்சள், குங்கு மம், சந்தனம், சுத்தமான தண் ணீர், பசும்பால் இவைகளுடன் ஊறவைத்த எள்ளை வெல்லம்வைத்து அரைத்தும், ஊறவைத்த பச்சரிசியை வெல்லம் வைத்து அரைத்தும் இவைகளை தனித்தனியாக ஏலக்காய் போட்டு நெய்வேத் தியத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். இவை இரண்டும் தான் நாகசதுர்த்தி நாகபூஜைக்கு நெய்வேத்தியம் ஆகும். சிலர் முளைகட்டிய பயிரையும் நிவேதிப்பார்கள். புற்றிருந்தால் முதலில் புற்றுக்கு கொஞ்சம் பாலை வார்க்க வேண்டும். அதன்பின் புற்றுக்கு மஞ்சள் குங்குமம், சந்தனம் இட வேண்டும். நாகப்பிம்பங் களுக்கு முதலில் தண்ணீர் மூன்று முறை அபிஷேகம் செய்யவேண்டும்.

அதன்பின் பாலை மூன்று முறை அபிஷேகம் செய்தபின், மறுபடியும் தண்ணீரை மூன்று முறை அபிஷேகம் செய்ய வேண்டும். அபிஷேகம் செய்யும் போது, நாகராஜா, சுப்பராயா, நாகேந்திரா உன்புற்றில் பாலை வார்க்கிறேன். என்புற்றுக்கு (நம் வயிறுதான் புற்று) எந்தக்குறை யும் இல்லாமல் குளிர்ச்சியாக வைக்க வேண்டியது உன் பொறுப்பு, உன்னையே நம்பியி ருக்கும் எனக்கு புத்திரபாக்கி யத்தைக் கொடுத்து, புத்திர சோகத்தை அழித்து, புத்திர பௌத்திகளுடன் நீண்ட காலம் தீர்க்க சுமங்கலியாக வாழவைக்க வேண்டும்.நான் செய்யும் விரதத்தில் ஏதும் குறை இருந்தா லும் அதை மன்னித்து உன் அருளால் சகல சவுபாக்கியங் களையும் அருள, உன்னை மனமார வேண்டி நிற்கின்றேன். எனது சகோதர பாக்கியத்திற்கும் எக்குறையும் வராமல் காப்பாற்ற வேண்டியது என் கடமையாகும். அதையும் நீயே அருளவேண்டி நிற்கின்றேன். என் பூஜையை ஏற்று என் கோரிக்கையை நிறை வேற்ற உன்னைப் பிரார்த்தித்து நமஸ் கரிக்கின்றேன் என்று சொல்லிக் கொண்டே பூஜிக்க வேண்டும். அபிஷேகம் ஆனபின் நாகர் சிலை மஞ்சளை தலை முதல் வால்முடிய தடவி, சந்த னம், குங்குமத்தினால் அலங் கரித்து, பூமாலைகளை அணி வித்து பஞ்சினால் செய்துள்ள கோடிதந்தி யம், வஸ்திரம் இவை களை அணிவித்து, கீழே கோலம் போட்டு, அதற்கும் மஞ்சள், சந்தனம், குங்குமம் புஷ்பங்களி னால் அலங்கரித்து, பூ அட்ஷ தையுடன் பூஜித்தல் வேண்டும்.

தேங்காய் உடைத்து, பழம், வெற்றிலை, பாக்கு இவை களுடன், வெல்லம் கலந்து எள் விழுது, வெல்லம் கலந்த அரிசி விழுது இவைகளையும் நெய்வேதிக்க வேண்டும்.

கற்பூர ஆரத்தி எடுத்து மங்களகரமாகப் பூஜை செய்ய வேண்டும். பிரசாதத்தை எடுத்து, நாக சிலைகளுக்கு சமர்பித்து அரசமரத்தை சுற்றி வந்து வணங்கி முடிக்க வேண்டும்.

## ஆடி ஸ்பெஷல்

உமையவள் தவமிருந்தது, ஆண்டாள் அவதரித்தது, ஹயக்ரீவர் அவதாரம், வரலக்ஷ்மி விரதம், நிகழ்ந்தது உள்ளிட்ட பல முக்கியமான விஷயங்கள் ஆடி மாதத்தில்தான் நிகழ்ந் திருக்கின்றன என விவரிக்கிறது புராணம். ஆடி மாதத்தில்தான் ஆடிப்பதினெட்டாம் நாள், ஆடிப்பெருக்கு என கொண்டாடப்படுகிறது.

ஆடிப்பூரத் திருநாள்தான், ஆண்டாள் பிறந்தநாள். அன்றைய நாளில், ஆண்டாள் கோயில்என்றுஅழைக்கப்படும் ஸ்ரீவில்லிபுத்தூர் உள்ளிட்ட வைணவத் தலங்களில், ஆண்டாளுக்கு சிறப்பு பூஜைகளும் வழிபாடுகளும் நடைபெறும். நாச்சியார் திரு மொழி பாடியும் திருப்பாவை பாடியும் ஆண்டாளை வழிபடுவார்கள் பக்தர்கள். அப்போது, ஆண்டாளை வழிபட்டால், உங்களின் எல்லா பிரார்த்தனைகளும் நிறைவேறும் என்பது ஐதீகம்.

ஆடி மாதம் அம்மனுக்கு சாற்றப்படும் வளையல் சாற்றி வழிபடுவது வழக்கம். அந்த வளையல்களை கன்னிப் பெண்கள் அணிந்து கொண்டால், விரைவிலேயே திருமணம்நடைபெறும்என்பது



பக்தர்களின் நம்பிக்கை. கர்ப்பிணிகள் அம்மனுக்கு அணிவித்த வளையலை அணிந்து கொண்டு பிரார்த்தித்தால், சுகபிரசவம் நிகழும்.ஆடி மாத வெள்ளிக் கிழமைகளில் அதிகாலையில் எழுந்து குளித்துவிடுங்கள். முதல்நாளே, பூஜையறையைச் சுத்தம் செய்துவிடுங்கள். வெள்ளிக்கிழமையில் அதிகாலையில் குளித்து விட்டு, சாணத்தைக் கொண்டு பிள்ளையாராகப் பிடித்துவையுங்கள். மஞ்ச ளிலும் பிள்ளையார் பிடித்து வைக்கலாம்.

செவ்வரளிப்பூ, செம்பருத்தி, அருகம்புல் கொண்டு பூஜையைத் தொடங்குங்கள். சூரிய உதயத்திற்கு முன்னதாக இந்தப் பூஜையைச்செய்வது விசேஷம். பிள்ளையாருக்கு அருகில், வாழை இலையில் நெல் பரப்பிவைத்துக் கொள் ளலாம். அல்லது அரிசியையும் வைக்க லாம். அதன் மேலே கொழுக் கட்டைகள் வைத்து நைவேத் தியம் செய்து, கணபதியைவழிபடகவலைகள் பறந்தோடும். விக்னேஸ்வரரை வணங்கினால், விக்னங்கள் அனைத்தும் தீரும்.

ஆடி மாதத்தைப் பற்றி இன்னொரு கருத்தும் சொல்லுவார்கள். அதாவது ஆடி மாதம் பீடை மாதம் என்று சொல்லுவார்கள். அதனால், இந்த மாதத்தில், நல்ல காரியங்களைச் செய்யாமல் ஒதுக்குவார்கள். ஆனால் ஆடி மாதம் பீடை மாதம் இல்லை. பீட மாதம். அதாவது, வழிபடுவதற்கு உகந்த மாதம். அதாவது, அம்பிகையை, மனதை பீடமாக்கி வழிபடும் மாதம். அந்த மன பீடத்தில் அவளை அமர்த்தி அவளையே நினைந்து, மனதார வேண்டிக் கொண்டிருக்கிற மாதம். பீட மாதம் என்பதுதான் பின்னாளில் பீடை மாதம் என அறியாமல் சொல்லப்பட்டு, அதுவே காலம் கடந்தும் புரியாமல் இருந்து வருகிறது.

ஆடிபௌர்ணமிரொம்பவே விசேஷமானது. சில ஆலயங்களில் அன்றைக்கு சிவலிங்கத்திருமேனிக்கு திரட்டுப்பால் அபிஷேகம் நடைபெறும். அன்றைய நாளில், வீட்டில் சிவனாருக்கு பால் கொண்டு நைவேத்தியம் செய்து வழிபடுவது, நல்ல நல்ல பலன்களை வழங்கும் என்பது ஐதீகம்.

மனதைத் தெளிவாக்கும் உன்னதமான ஆடி மாதத்தில், அம்பிகையை வணங்குவோம். மனதில் ஆன்மிக எண்ணங்களை வளர்ப்போம். நமக்குள்ளேயும் நம்மைச் சுற்றிலும் நல்ல நல்ல அதிர்வுகள் சூழ்ந்து நம்மை இன்னும் காத்தருளும்!


# CLASSIFIEDS

INDEPENDENT HOUSE RENTAL
INDEPENDENT HOUSE @EAST TAMBARAM
KASPAPURAM, AGARAMTHEN, Nr. MAPPEDU BUS STAND,
1BHK 500 SQ.FT, GF, RENT RS.10K/ 5 MONTHS ADVANCE
99400 89434

FLAT RESALE
FLAT FOR RESALE @PORUR
2&3 BHK FLATS AVAILABLE WITH CCP
80722 30451

FLAT RENTAL
FLATS FOR RENTAL @ CHROMPET
AVAILABLE 2BHK PURE VEG
8072230451

FLAT FOR RESALE @ CHROMPET GANAPATHIPURAM
2BHK-900 Sqft UDS 440 Sqft
FIRST FLOOR ,NORTH FACING
RS.37 LAKHS (NEGO)
9962003409

GST NEWS
வெளிநாடு வாழ் தமிழர்கள் உங்கள் ஊர் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.gstroadnews.com

INDEPENDENT HOUSE SALE
IND. HOUSE FOR SALE @ PERUNGALATHUR
LAND AREA - 1440 Sqft
BUILT UP AREA - 1290 Sqft
80722 30451

FLAT FOR RESALE @CHROMPET @RADHA NAGAR
2BHK-742 Sqft
UDS-412 Sqft
1ST FLOOR
80722 30451

WANTED
DTP OPERATOR FEMALE/MALE
COREL DRAW
PHOTOSHOP
INDESIGN
TAMIL TYPING
89395 26999

PLOT SALE
PLOTS FOR SALE @WEST TAMBARAM
VARADARAJAPURAM Nr.ORR TOLL PLAZA
30 ft,40,50 ft ROAD
1,1.5,1.75 GROUNDS
Rs.1650 to 3000/Sqft
99401 62322

BUILDING CONTRACT


@ 2500/- SqFt.,
Building Construction
+ Renovation + Interior
Including OHT & Septic Tank
✓ Architectural Design
✓ Engineer Supervision
✓ Branded Materials
80724 99969

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

GST ROAD NEWS
விளம்பர விசாரணைக்கு தொடர்பு கொள்ள:
8939 526 999
044 - 222 363 99

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 525/- (Colour) மட்டுமே
044 - 2224 0607 / 89395 26999


## ஆகஸ்ட் 1 முதல் ஆன்லைனில் ஹோமம் டிக்கெட்டுகள்: திருப்பதி தேவஸ்தானம் அறிவிப்பு



திருப்பதி: ஆகஸ்ட் 1ம் தேதி முதல் ஆன்லைனில் ஸ்ரீநிவாச திவ்ய அனுக்ரஹ ஹோமம் டிக் கெட்கள் வழங்கப்படும் என திருமலை திருப்பதி தேவஸ் தானம் அறிவித்துள்ளது. திருப் பதி அலிபிரி நடைபாதை தொடக்கத்தில் கோசாலை அருகே பெருமாள் கோயில் உள்ளது.

இங்கு தினமும் ஸ்ரீநிவாச திவ்ய அனுக்ரஹ ஹோமம் நடைபெறுகிறது. இதற்காக 150 ஆன்லைன் டிக்கெட்களும், நேரில் 50 டிக்கெட்களும் பக் தர்களுக்கு வழங்கப்பட்டு வந் தன. இந்நிலையில் வரும் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் ஆன் லைனிலேயே தினமும் 200 ஹோமம் டிக்கெட்டுகள் வழங் கப்படும் என திருப்பதி தேவஸ் தானம் அறிவித்துள்ளது.

இந்த டிக்கெட்டின் விலை ரூ.1,000 ஆகும். இதில் தம்பதி சமேதராக பக்தர்கள் கலந்து கொள்ளலாம். ஹோமம் முடிந்த பின்னர், இதில் பங்கேற்ற தம் பதி ரூ.300 டிக்கெட் கள் இரண்டை பெற்று, திரு மலைக்கு சென்று ஏழுமலை யானை தரிசிக்கலாம் என தேவஸ்தானம் அறிவித்து உள் ளது.


ஸ்ரீ விஜயகணபதி ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பெருமாள் ஆலயம்
எண்.5, 3வது குறுக்குத் தெரு, புருஷோத்தமன் நகர், குரோம்பேட்டை, சென்னை- 600044.
நிர்வகிப்பது புருஷோத்தமன் நகர் ஆலய பரிபாலன சபா.
புருஷோத்தமன் நகர் ஆலய பரிபாலன சபாவின் 13 வது பொதுக்குழு கூட்டம் 03.08.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் நமது ஆலய வளாகத்தில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.
ஆலய நிர்வாகம்



குரோம்பேட்டை ஸ்ரீ சத்யசாய் கல்வி நிறுவனம் சார்பில் நன்றி உணர்வு நமது உயிர் மூச்சு என்ற தலைப்பில் பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி நடைபெற்றது.முதல்வர் பொறுப்பு வகிக்கும் வேதநாயகி வரவேற்றார். சத்திய சாய் நிறுவன செவிலியர் கல்லூரி முதல்வர் மஞ்சூரி சிறப்பு உரை ஆற்றினார். பூங்கோதை நன்றி தெரிவித்தார். பல்வேறு பள்ளிகளை சேர்ந்த மாணவர்கள் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசினார்கள். இறுதியில் தரமணி தேசிய ஆசிரியர் பயிற்சி நிறுவன பேராசிரியர் ஷோபா நிறைவு உரை ஆற்றினார்.ஆன்மிக ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன் நன்றி தெரிவித்தார்.ஆர்.கே.நர்சிங் ஹோம் மருத்துவர் ஹரிஹறன் கலந்து கொண்டார்.



மு.க.ஸ்டாலின் அப்போலோ மருத்துவமனையில் திமுக மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளை அழைத்து ஆலோசனை நடத்தினார்.தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பில் அதிகமான மக்களை இணைத்து மாபெரும் வெற்றி அடைந்து வருவதற்கு காரணமான திமுக வினருக்கு பாராட்டு தெரிவித்த முதல்வர் ஸ்டாலின், 150 தொகுதி களில் 30% உறுப்பினர் சேர்க்கை என்ற இலக்கை அடைந்ததுள் ளதையும் சுட்டிக்காட்டி பாராட்டினார்.அதேசமயம், திமுக உறுப்பினர் சேர்க்கையில் பின் தங்கியுள்ள ஓரிரு மாவட்டங்கள், தொகுதிகளைக் குறிப்பிட்டு, அவற்றை மண்டலப் பொறுப்பாளர்கள் கவனித்துச் சரிசெய்யுமாறு அறிவுறுத்தினார்.

## மருத்துவ குறிப்பு

கல்யாண முருங்கையை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் முடி நரைக்காது.


VISHNUSRI HOMES
Ind. House Plan
Flat Renovation
Expansion
Modular KItchen
Sump & Compound Wall
73972 32365
94456 80095

WANTED IMMEDIATELY
Dental Clinic
DENTIST
NEEDED URGENTLY
Evening 5.30pm to 10.30pm
74016 75675

குரோம்பேட்டை
ரியல் எஸ்டேட் அலுவலகத்திற்கு +2 / டிகிரி படித்த உதவியாளர் தேவை
அக்கௌண்ட் மற்றும் கம்ப்யூட்டர் தெரிந்திருக்க வேண்டும்.
99529 62911

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 30 TO 75, SSLC AND ABOVE
Work Form Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949


## சருமம் மிளிர உதவும் உருளைக்கிழங்கு



பச்சை உருளைக்கிழங்கை அரைத்து எடுத்த பேஸ்ட்டை தேனுடன் கலந்து சருமத்தில் தடவினால் சருமம் மிளிரும்.

உருளைக் கிழங்கு சோலானம் டியூபரோசம் என்னும் செடியின் வேரில் இருந்து பெறும் மாவுப்பொருள் நிறைந்த, சமையலில் பயன்படுத்தபடும், ஒருவகைக் கிழங்கு வகையாகும். உருளைக்கிழங்கு தாவரம் நிழற்செடி குடும்பத்தைச் சேர்ந்தது.

அரிசி, கோதுமை, சோளம் ஆகியவற்றுக்கு அடுத்து உலக அளவில் நான்காவதாக அதிகம் பயிர் செய்யப்படும் செடியினமாகும். உருளையானது பல்லாண்டு வாழ்கின்ற பூண்டுத் தாவரமாகும். உருளையின் தரைகீழ் கிளைகளின் பருத்த நுனிப்பகுதியே கிழங்காகும்.

உருளைகிழங்கில் கலோரி 70%, புரதச்சத்து 0 கிராம், நார்ச்சத்து 2.1 கிராம், இரும்புச்சத்து 0.81 மி.கிராம், கால்சியம் 12 மி.கிராம், சோடியம் 6 மி.கிராம், பொட்டாசியம் 421 மி.கிராம், சர்க்கரை 0.8 கிராம் ஆகியவை அடங்கியுள்ளன. மேலும் வைட்டமின் B6, சி போன்றவையும் நிறைந்துள்ளன.

உருளைக்கிழங்கில் கார்போஹைட்ரேட் அதிகமாகவும், புரதம் குறைந்த அளவும் உள்ளன. எனவே ஒல்லியாக இருப்பவர்கள் உருளைகிழங்கை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் எடை அதிகரிக்கும்.

உருளையில் கார்போஹைட்ரேட் அதிகம் இருப்பதால், அது சுலபமான செரிமானத்திற்கு உதவியாக இருக்கும். அதனால் நோயாளிகள், குழந்தைகள் மற்றும் செரிமானமின்மையால் கஷ்டப்படுபவர்களுக்கு உருளையானது சிறந்த உணவாகும்.

வைட்டமின் சி, வைட்டமின் பி மற்றும் பொட்டாசியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், ஜிங்க் ஆகிய கனிமங்கள் சருமத்திற்கு மிகவும் நல்லது. இவை அனைத்தும் உருளைகிழங்கில் நிறைந்துள்ளன. மேலும், பச்சை உருளைக்கிழங்கை அரைத்து எடுத்த பேஸ்ட்டை தேனுடன் கலந்து சருமத்தில் தடவினால் சருமம் மிளிரும். மேலும் இது பரு மற்றும் சரும புள்ளிகளை குணப்படுத்த உதவும்.

## ஓபிஎஸ்க்கு அனுமதி மறுப்பு

தூத்துக்குடி விமான நிலையத்தில் பிரதமர் மோடியை சந்திக்க ஓபிஎஸ் அனுமதி கேட்டிருந்தார். அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாலக்கீரை சாம்பார்



தேவையான பொருட்கள்: பாலக் கீரை 1 கட்டு, வேகவைத்த துவரம் பருப்பு 1 கப், சின்ன வெங்காயம் 10, தக்காளி 1, சாம்பார் பொடி 1 டேபிள்ஸ்பூன், மஞ்சள் தூள்1 டீஸ்பூன், புளி1 எலுமிச்சை அளவு, பெருங்காயத்தூள் 1/2 டீஸ்பூன், கொத்துமல்லித்தழை, சிறிது உப்பு சுவைக்கு, தாளிக்க கடுகு 1 டீஸ்பூன், உளுந்து 1 டீஸ்பூன், சீரகம் 1 டீஸ்பூன், வெந்தயம் 1 டீஸ்பூன், எண்ணெய் 1 டீஸ்பூன் செய்முறை: கீரையை நன்றாக சுத்தம் செய்து வைத்து கொள்ளவும். தக்காளி, வெங்காயம், கொத்தமல்லியை பொடியாக நறுக்கி கொள்ளவும். புளியை சிறிது நீரில் கரைத்து கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் சிறிது ஊற்றி கீரையை போட்டு அதனுடன் வெங்காயம் மற்றும் தக்காளியை சேர்த்து நன்றாக வேகவைத்து கொள்ளவும். நன்றாக கீரை வெந்ததும் அதை மத்தால் மசித்து கொள்ளவும். மசித்த கீரையுடன் மஞ்சள் தூள் மற்றும் சாம்பார் தூள் சேர்த்து நன்றாக பச்சை வாசனை போகும் வரை கொதிக்க விடவும். பின் அதில் புளி கரைசல், வேகவைத்த துவரம் பருப்பை சேர்த்து நன்றாக கலக்கவும். உப்பு மற்றும் பெருங்காயத்தூள் சேர்த்து ஐந்து நிமிடம் குறைந்த தீயில் மூடி வைத்து விடவும். மற்றொரு கடாயை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு, உளுத்தம்பருப்பு, சீரகம், வெந்தயம் சேர்த்து தாளித்து கீரை குழம்பில் கொட்டி கொத்தமல்லி தழை தூவி இறக்கவும். சூடான சாதத்தில் சிறிது நெய் சேர்த்து சாப்பிட்டால் நன்றாக இருக்கும்.


பசும்பால், தயிர், நெய், பன்னீர், பால்கோவா, வெண்ணெய், பாதாம் மில்க் ஷேக், ரோஸ் மில்க் ஷேக், இட்லி/ தோசை மாவு,ஸ்வீட்ஸ், காரம்,ஸ்னாக்ஸ் அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்
S.VENKATESAN
94864 49473

அலுவலகத்துக்கு ஆட்கள்தேவை
கணக்காளர் : 3+ ஆண்டு அனுபவம், ஆண் முன்னுரிமை, வயது 45க்கு உட்பட்டவர்
இயந்திர உதவியாளர்: வயது 30க்குள் குறைந்தது 10ம் வகுப்பு தேர்ச்சி,
காமா டெக் என்டர்ப்ரைசஸ்
சேலையூர், தாம்பரம்
78239 91919

NETLON
SAI SRI DHARSHINI ENTERPRISES
Plot No:10, Door.13, Mageshwari Nagar, 3rd Street, Hasthinapuram, Chennai - 600 064.
SAINT-GOBAIN
MOSQUITO NET
PROPRIETOR M.VENKATESH, B.COM.,
97103 55252 / 86109 10731

BUYING / SELLING
BUYING / SPOT CASH
WORKING AND NOT WORKING
A/C, BRASS,STAINLESS STELL, FRIDGE, OLD COMPUTER, LAPTOP, UPS, BATTERIES, MUSIC SYSTEM, WATER HEATER, GYM ITEMS, WOODEN FURNITURE, SOFA SET, COT, BEURO, DINING SET, DRESSING & OFFICE TABLE, OLD ALUMINIUM
ALL A TO Z SCRAPS
SRIRAM TRADERS
94441 33979

WANTED
Part Time Job
Office Work - Male & Female
Any Degree Timing : 3.00 pm - 7.00 pm
Preferably for (1st Year College Students)
No.4/7a, Padmanabha Nagar, Karumariamman Kovil 1st st, Chrompet, Ch - 44
gstroadnews@gmail.com
89395 26999

GST ROAD NEWS
FOR ADVERTISMENT DETAILS CONTACT
89395 26999 / 044-22236399


## இடுப்பு தசையை குறைத்து கொடி இடையாக்க எளிய உடற்பயிற்சிகள்



பெண்கள் இடுப்பை சுற்றி கொழுப்பு சேருவது தேவையற்ற உடல்நல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். அழகையும் கெடுக்கும். இடுப்பு தசையை குறைத்து கொடி இடையாக்க, எளிய உடற்பயிற்சிகள் கைகொடுக்கும்.* வலது கையை தரையில் ஊன்றிக்கொண்டு இரு கால்களையும் நேராக நீட்டிக்கொள்ள வேண்டும். அப்போது இடுப்பை நன்றாக தூக்கிக்கொண்டு கால்களை நேர்கோட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். இடது கையை இடுப்பு மீதோ, முதுகிலோ வைத்துக்கொண்டு ஒரு நிமிடம் வரை சாய்ந்த நிலையில் இருக்க வேண்டும். அதேபோல் 10, 15 முறை செய்ய வேண்டும்.* இரண்டு கைகளை தரையில் ஊன்றிக்கொண்டும் பயிற்சி மேற்கொள்ளலாம். அப்போது தலை, இடுப்பு, கால்கள் ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் இருக்க வேண்டும். பின்னர் வலது கையை தலைக்கு பின்னால் வைத்துக்கொண்டு சில வினாடிகள் அப்படியே இருக்க வேண்டும். பின்னர் இரு கைகளையும் தரையில் ஊன்றிக்கொள்ளவேண்டும். அதைத்தொடர்ந்து வலது கையைஇடதுபுறதோள்பட்டை மீது வைத்துக்கொண்டு சில வினாடிகள் அழுத்தம் கொடுக்க வேண்டும். பின்பு கைகளை தரையில் ஊன்றி இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும்.* தரையில் படுத்துக்கொண்டு கைகளை ஊன்றாமல் கால்களை மேலே தூக்கியும் பயிற்சி மேற்கொள்ளலாம். அதுவும் இடுப்பு தசையை குறைக்க உதவும். முதலில் தரையில் படுத்துக்கொண்டு இரு கைகளையும் தலையின் பின்பகுதியில் கெட்டியாக பிடித்துக்கொள்ள வேண்டும். மூட்டு பகுதியை செங்குத்தாக வைத்துக்கொண்டு கால்களை மேலும் கீழும் அசைக்க வேண்டும். பின்னர் தலையை இடதுபுறம் திருப்பி, இரு கால்களையும் நேராக நீட்ட வேண்டும். பின்னர் ஒரு காலை மட்டும் நீட்டி மடக்க வேண்டும். அதன்பிறகு வலது புறத்தில் தலையை திருப்பிக்கொண்டு மற்றொரு காலை நீட்டி மடக்க வேண்டும்.*தரையில் அமர்ந்து கொண்டு இரு கால்களையும் நீட்டிக்கொண்டு தலையை குனிந்தபடி இருக்கைகளால் கால் விரல்களை தொட்டும் பயிற்சி செய்யலாம். இந்த உடற்பயிற்சிகளை சில வாரங்கள் தொடர்ந்து செய்து வந்தால் இடுப்பு தசைகள் குறைய தொடங்கும். உடற்பயிற்சி வல்லுனர்களுடன் கலந்தாலோசித்து முறையாக பயிற்சி மேற்கொள்வது விரைவாக பலன் தரும்.

## முள்ளங்கி மூலம் நாம் அடையும் பயன்கள் பற்றி தெரிந்து கொள்வோமா



முள்ளங்கியில் அதிகளவு உள்ள நார்ச்த்து மற்றும் நீர்ச்சத்து மலத்தினை இளக்கி கழிவாக எளிதாக வெளியேற்றுகிறது. செரிமான உறுப்புகளில் உள்ள நச்சுப் பொருட்களை இக்காய் நீக்கு வதால் மூலநோய், வாயு தொந்தரவு, மலச்சிக்கல் ஆகியவற்றிற்கு இது சிறந்த தீர்வாக உள்ளது. முள்ளங்கியானது சிறுநீரை நன்கு பெருகச் செய்கிறது.

காய்ச்சல், வீக்கம், தொண்டை வலி போன்ற எண்ணற்ற நோய்களுக்கு மருந்தாக வெள்ளை முள்ளங்கி விளங்குகிறது. முள்ளங்கியை அடிக்கடி உணவில் சேர்த்து கொள்வதால் ரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவை சீராக வைக்கும். மஞ்சள் காமாலையினால் பாதிக்கப்பட்ட கல்லீரல் மற்றும் பித்தப்பையினை சரி செய்யும்.

1.முள்ளங்கியில் பொட்டாசியம், கால்சியம், இரும்பு, மாங்கனீசு மற்றும் ஃபோலேட் போன்ற பல்வேறு வகையான தாதுக்கள் நல்ல அளவில் உள்ளன.

2.முள்ளங்கியிலுள்ள வைட்டமின் சி, நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த உதவுகிறது.


3.முள்ளங்கி நீரிழிவு நோயாளிகளுக்கு நன்மை பயக்கிறது. ஏனெனில், இது இன்சுலின் உற்பத்தியை அதிகரிக்கும் இரத்த சர்க்கரை அளவைக் குறைக்கிறது.

4.நீரிழிவு நோயாளிகள் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முள்ளங்கியுடன், முள்ளங்கி இலைகளையும் உட்கொள்ள, மருத்துவர்களால் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

5.தலை முடியை வலுவானதாக மாற்ற முள்ளங்கி சாப்பிட வேண்டும். முள்ளங்கி சாறு முடி உதிர்தலைக் குறைக்க பயனுள்ளதாக அமைகிறது.

6.முள்ளங்கி சாற்றைக் கொண்டு தலைமுடியில் மசாஜ் செய்து சுமார் 15 முதல் 20 நிமிடங்கள் கழித்து கழுவவும். இந்த, செயல்முறையை வாரத்திற்கு இருமுறை செய்வதன் மூலம் கூந்தலின் வேர்களை பலப்படுத்த இயலும்.

7.முள்ளங்கியின் ஊட்டச்சத்து முக்கியத்துவம் காரணமாக, மஞ்சள் காமாலைக்கு சிறந்த சிகிச்சையளிக்க முள்ளங்கி பயனுள்ளதாக அமைகிறது.



தாம்பரம் காமராஜபுரம், மாநகராட்சி சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன் கலந்து கொண்டு, மக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு முறையாக பதிவு செய்யப்படுவதைப் பார்வையிட்டு பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்களுக்கான தீர்வுகளை வழங்கினர். இந்நிகழ்வில், மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர், துணை மேயர் கோ.காமராஜ் மாமன்ற உறுப்பினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்கு வருவதை தொடர்ந்து அவரை வரவேற்க செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகளை குறித்து குரோம்பேட்டை ஜி.எஸ்.டி ரோட்டில் அமைந்துள்ள ஆனந்தா திருமண மாளிகையில் குரோம்பேட்டை அதிமுக பகுதி செயலாளர் வழக்கறிஞர் குரோம்பேட் எம்.கே..சதீஷ் தலைமையில் நடைபெற்ற அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் பங்கேற்றார். இக்கூட்டத்தில் குரோம்பேட்டை பகுதி நிர்வாகிகள் வாகனங்களில் புரட்சித் தமிழரின் எழுச்சி பயணம் எந்த ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது.

## ஸ்டாலின் நாளை வீடு திரும்புகிறார்?



முதலமைச்சர் ஸ்டாலின் கடந்த 21ஆம் தேதி நடை பயணத்தின் போது தலைசுற்றல் ஏற்பட்டதால் அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் அவருக்கு தீவிர பரிசோதனைகள் நடைபெற்றன. இரண்டு நாட்களுக்கு முன்பு ஆஞ்சியோ சிகிச்சையும் நடத்தப்பட்டது. இதனை தொடர்ந்து அவர் உடல்நிலை சரியானது ஓய்வுக்கு பின்பு நாளை அவர் வீடு திரும்புவார் என தெரிவிக்கப்படுகிறது.

## விஜய் மாநாட்டில் 10 லட்சம் பேர் அமர ஏற்பாடு

நடிகர் விஜய் கட்சியின் மாநாடு ஆகஸ்ட் 25ஆம் தேதி மதுரையில் நடக்கிறது இந்த மாநாடு பிரம்மாண்டமாக நடத்தப்படும் என்று அறிவித்துள்ளன இதற்கான பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.நாட்டில் 10 லட்சம் பேர் கலந்து கொள்ள இருப்பதாகவும் 50,000 வாகனங்கள் வரும் என்றும் தெரியவந்துள்ளது10 லட்சம் பேர் அமரும் வகையில் மாநாட்டு பந்தல் அமைக்கப்பட உள்ளது. இதற்காக இரும்பு போஸ்டுகள், ராட்சத கிரேன் மூலம் நடப்படுகிறது.

## மேகாலயாவில் திருமணத்திற்கு முன்பு எயிட்ஸ் பரிசோதனை

இந்தியாவில் எய்ட்ஸ் பாதித்தவர்கள் அதிகம் வசிக்கும் மாநிலங்களில் மேகாலயா ஆறாவது இடத்தை பிடித்துள்ளது. இந்த பிரச்சனை காரணமாக மேகாலயாவில் திருமணத்திற்கு முன்பு ஆண்களுக்கு எய்ட்ஸ் பரிசோதனை நடத்தப்படும் என்று அந்த மாநில சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

## இந்தியர்கள் தாய்லாந்து செல்ல வேண்டாம் மத்திய அரசு

இந்தியர்கள் அதிகம் சுற்றுலா செல்லும் நாடுகளில் முதன்மையானது தாய்லாந்து ஆகும் தற்போது அந்த நாட்டுக்கும் கபோரியாவுக்கும் மோதல் ஏற்பட்டு 15 பேர் பலியாகி விட்டனர்.

இதன் காரணமாக இந்தியர்கள் தற்போது தாய்லாந்து செல்ல வேண்டாம் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

## இந்தியன் 3 மீண்டும் தயாரிப்பு

நடிகர் கமல்ஹாசன் நடித்த இந்தியன் படம் பெரு வெற்றி பெற்றது ஆனால் இந்தியன் 2 படம் படுதோல்வி அடைந்தது இதனால் இந்தியன் 3 படம் வெளிவருமா என்ற கேள்வி எழுந்தது ஏனென்றால் அதன் 90% காட்சிகள் ஏற்கனவே படம் ஆக்கப்பட்டு விட்டன .

மீதி பகுதியை படம் எடுக்க கமலஹாசனும் இயக்குனர் சங்கரும் ஊதியம் கேட்டதால் இந்த பிரச்சனை வெடித்தது. தற்போது நடிகர் ரஜினிகாந்த் தலையிட்டதால் இருவரும் மீண்டும் சம்பளம் இல்லாமல் அந்த படத்தை நடித்து கொடுக்க சம்மதித்து உள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனால் இந்தியன் 3 படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளது

## மீண்டும் ரிலீசாகும் விஜயகாந்த் படம்



விஜயகாந்த் நடித்து பெரும் வெற்றி பெற்ற படம். கேப்டன் பிரபாகரன் இந்த படம் 1991 ஆம் ஆண்டு வெளியானது. இது விஜயகாந்தின் நூறாவது படம் ஆகும் .

தற்போது இந்த படம் மீண்டும் வெளியாகிறது ஆகஸ்ட் மாதம் விஜயகாந்த் பிறந்தநாளை ஒட்டி 22ஆம் தேதி வெளியாகும் என்று அறிவித்துள்ளனர் படத்தை டிஜிட்டல் முறையில் மாற்றி அமைத்துள்ளனர்

## 1050 கோடிக்கு கிரிக்கட் அணி வாங்கிய சன் குழுமம்

சன் டிவி நெட்வொர்க், அதன் தாய் நிறுவனமான சன் குழுமத்தின் மூலம், இங்கிலாந்தின் தி ஹண்ட்ரட் கிரிக்கெட் லீக்கில் ஒரு உரிமையாளரான நார்தர்ன் சூப்பர்சார்ஜர்ஸின் முழு உரிமையையும் சுமார் ர100 மில்லியனுக்கு (சுமார் 1,050 கோடி) பெற்றுள்ளது.

## தாம்பரம் மாநகராட்சி முன்பு முதியவர் திடீர் போராட்டம்

பல்லாவரம், குரோம்பேட்டை பகுதியில் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். சாலைகளை சீரமைக்க வேண்டும். பல்லாவரம் பெரிய ஏரியில் கழிவுநீர் கலப்பதை தடுக்க வேண்டும். குரோம்பேட்டைராதாநகர் நாயுடு ஷாப் பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட சிறு பாலத்தை உடைத்து விட்டு புதிய பாலம் கட்ட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி குரோம்பேட்டை கட்டபொம்மன் குறுக்கு தெருவைச் சேர்ந்த கோதண்டபாணி (வயது 74) என்ற முதியவர், தாம்பரம் மாநகராட்சி அலுவலக நுழைவு வாயில் அருகே தரையில் அமர்ந்து போராட்டம் நடத்தினார். அவரிடம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். இதுபற்றி மாநகராட்சி அதிகாரிகளை சந்தித்து பேசி தீர்வு காணும்படி கூறினர்.

அதற்கு அவர்,'பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை.எம்.எல்.ஏ. வீட்டு அருகிலேயே இந்த நிலை உள்ளது. மழை பெய்தால் எங்கள் வீட்டின் உள்ளே தண்ணீர் வருகிறது. இதுபற்றி கூறியும் மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவில்லை' என்றார். இதையடுத்து மாநகராட்சி அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி, இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறி முதியவரை அங்கிருந்து அனுப்பி வைத்தனர்.

## ரஜினி படத்தில் கமல் நடிப்பாரா?



நடிகர் ரஜினிகாந்த் நடித்த வரும் கூலி திரைப்படத்தில் கமலஹாசன் குரலை பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் நடிப்பார் என்றும் செய்திகள் வெளியாகி வருகின்றன ஆனால் இந்த தகவலை இயக்குனர் லோகேஷ் கனகராஜ் திட்டவட்டமாக மறுத்தார்.இது ரஜினிகாந்த் படம் அதில் கமல் நடிக்க இயலாது அதேபோல கமலுக்கான படத்தில் ரஜினி நடிக்க இயலாது என்று அவர் கூறினார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்
LET TRUTH PREVAIL
THE TIMES OF INDIA
THE HINDU
South India's No.1 English daily
...etc all Electronic Media
விளம்பரம் செய்ய அணுகவும்
SARAVANA AGENCY
No 4/7A, Padmanaban Nagar, Karumariamman koil 1st Street, Chrompet, Chennai - 44
9962880902 / 044 - 29532399

WANTED
Marketing Executive
GST ROAD NEWS
வார பத்திரிகை அலுவலகத்திற்கு
விளம்பரம் சேகரிக்க ஆட்கள் தேவை
+2 OR DEGREE TWO WHEELER MUST. SALARY - RS.25,000/-
AGE 18-40 Experience / Fresher
8939526999




Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725